

கேரள மாநிலம், வைக்கத்தில் நடைபெற்ற, வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழாவில், முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களிடம் வைக்கம் நாடாளுமன்ற உறுப்பினர் பிரான்சிஸ் ராஜ் வைத்த கோரிக்கையைத் தொடர்ந்து, முதலமைச்சர் தளபதி மு.க ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, கேரள மாநிலம், வைக்கத்தில், தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் அதி நவீன சொகுசு பேருந்தினை வைக்கம் தந்தை பெரியார் நினைவகம் முதல் வேளாங்கண்ணி வரை செல்லும் புதிய வழித்தட பேருந்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், கேரள மாநில போக்குவரத்துத் துறை அமைச்சர் கே.ஆர்.கணேஷ்குமார் ஆகியோர் துவங்கி வைத்தார்கள். உடன் வைக்கம் நாடாளுமன்ற உறுப்பினர் பிரான்சிஸ் ராஜ், வைக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஆஷா, கேரள மாநில போக்குவரத்து கழக மேலாண் இயக்குனர் பிரேம்மோத் சங்கர், தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குனர் மோகன், அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், திமுக கேரள மாநில அமைப்பாளர் முருகேசன், அரசு விரைவு போக்குவரத்து கழக தொமுச பொதுச்செயலாளர் பன்னீர்செல்வம்,மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர்.

### சென்னை உயர்நீதிமன்றமே எதிர்க்கட்சிகளின் முகத்திரையைக் கிழித்துள்ளது

# அருவருப்பு அரசியல் செய்கிறார் எடப்பாடி பழனிசாமி!

## சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!



சென்னை, ஜன. 4 -

அரசியல் இருப்பைக் காட்ட தமிழ்நாட்டு மாணவியரிடம் அச்ச உணர்வை ஏற்படுத்தும் உள்நோக்கத்துடன் செயல்படும் எடப்பாடி பழனிசாமி அருவருப்பு அரசியல் செய்கிறார் என்றும் சேடிஸ்ட் மனநிலையை பழனிசாமி நிறுத்த வேண்டும் என்றும் சென்னை உயர்நீதிமன்றம் எதிர்கட்சிகளின் முகத்திரையை கிழித்து தொங்கவிட்டுள்ளது என்றும் சட்டத்துறை அமைச்சர் ரகுபதி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு: -

ஒரு பொய்யை திரும்பத் திரும்பச் சொன்னால் உண்மையாகிவிடும் என கோயபல்ஸ் பாணி பிரச்சாரத்தில் இறங்கியிருக்கிறார் எதிர்கட்சித்தலைவர் பழனிசாமி.

திராவிட மாடல் ஆட்சியில் துணிச்சலாக பெண்கள் புகார் அளிப்பதை பொறுத்துக் கொள்ள முடியாமல் புகாரளித்தவர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும் விதமாக தினமும் அவரது நடவடிக்கைகள் மாறி வருகின்றன.

தினமும் அந்த நிகழ்வை நினைவூட்டும் வகையில் ஊடகங்களில் செய்தியாக்குவதை ஒரு அஜெண்டாவாக வைத்திருக்கும் பழனிசாமியின் நடவடிக்கைகள் பிறரைத் துன்புறுத்தி மகிழ்ச்சி காணும் அவரது சேடிஸ்ட் மனநிலையயை காட்டுகிறது.

திராவிட மாடல் அரசை குறை கூற காரணங்களின்றி ஒரே பொய்யை அரைத்து அரைத்து மக்களை ஏய்க்க நினைக்கிறார் பொய்ச்சாமி பழனிசாமி

**பொய்களை அள்ளி வீசுகிறார்!**

அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் தொந்தரவுக்கு ஆளாக்கபட்ட விவகாரத்தில் தமிழ்நாடு காவல்துறை மேற்கொண்ட விரைவான நடவடிக்கையால் குற்றவாளி உடனடியாக கைது செய்யப்பட்டதை மக்கள் அறிவர். மேலும் இவ்வழக்கில் எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட எதிர்கட்சிகள் பரப்பிய பொய்யை எல்லாம் வெட்ட வெளிச்சமாக்கி ஆதாரத்தோடு பலமுறை எடுத்துக் கூறியாயிற்று. உயர்நீதிமன்றத்திலும் தமிழ்நாடு அரசு சார்பில் விளக்கம் அளிக்கப்பட்டு மேற்கொண்டு விசாரணை நடைபெற்று வருகிறது. ஆனாலும் தினமும் விடிந்து எழுந்தவுடன் தனது அரசியல் ஆதாயத்திற்காக, அரைத்து அரைத்து புளித்த அதே பொய்களை அள்ளி வீசிக் கொண்டிருக்கிறார் பழனிசாமி.

இன்று உயர் நீதிமன்றமே எதிர்கட்சிகளின் செயலை தாங்கமுடியாமல் அவர்கள் முகத்திரையை கிழித்து தொங்கவிட்டுள்ளது.. 'எதிர்க்கட்சிகள் வெறும் விளம்பர நோக்கில் இந்த விவகாரத்தை அணுகுவதாக கூறி' கடுமையாக கண்டித்துள்ளது. இதைத் தான் ஆரம்பம் முதலே நாங்கள் கூறி வருகிறோம். இன்று அதை உயர்நீதிமன்றமே உறுதிப்படுத்தி உள்ளது. ஆனாலும் எடப்பாடிக்கு ஒரே பொய்யை திரும்பத் திரும்ப பேச எந்த கூச்சமும் இருப்பது இல்லை.

அடிமை அ.தி.மு.க. என்ற கட்சி இனி எடப்பாடி கையில் இருக்குமோ. . . இருக்காதோ. . . என்ற வகையில், 'காற்றில் கிழிந்து காணாமல் போக காத்திருக்கும் சின்னம்' தொடர்பான வழக்கு நடந்து வருவதால் அதைத் திசை திருப்ப உயர்நீதிமன்றமே கண்டித்த பின்னும் அரசியல் சுய நலத்திற்காக பாதிக்கபட்ட மாணவியின் எதிர்காலத்தை பற்றி கொஞ்சமும் கவலையின்றி நடந்துவருகிறார் பழனிசாமி.

தனது கட்டுப்பாட்டில் இருந்து அதிமுக கைநழுவிடுமோ என்ற அச்சத்தில் இருந்த பழனிசாமி, அண்ணா பல்கலைக்கழக மாணவி விவகாரத்தை வைத்து தனது இழந்த அரசியல் செல்வாக்கை மீட்க துடிக்கும் மட்டமான அரசியலை செய்து வருகிறார்.

**மட்டமான அரசியல்!**

தனது ஆட்சிக் காலத்தில் குற்றவாளிகளுக்கெல்லாம் கட்சியிலேயே அடைக்கலம் கொடுத்து அவர்களைக் காப்பாற்ற புகார் அளித்த பெண்களையே மிரட்டும் கொடுமைகளை எல்லாம் அரங்கேற்றிய பழனிசாமி இன்னும் அந்த மனநிலையை விட்டு வெளிவரவே இல்லை. இன்றும் அப்படி தொடரும் என எண்ணி ஏமாற வேண்டாம் பழனிசாமி.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி குற்றவாளி களை விரைந்து கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தி, பாதிக்கப்பட்ட வர்க்கு விரைவாக நீதி கிடைக்கும் வகையில் மின்னல் வேகத்தில் செயலாற்றி வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு ஆட்சிப்பொறுப்பேற்ற நாள் முதல் பெண்கள் நலனில் தனி அக்கறை கொண்டு செயல்பட்டு வருகிறது. பெண்கள் முன்னேற்றத் திட்டங்களை வகுத்து செயலபப்படுத்துவது மட்டுமல்லாமல், பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பிற்காக பல் வேறு சிறப்பு பிரிவுகளை உருவாக்கி பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதால் இன்று இந்தியாவிலேயே பெண்கள் குழந்தைகள் பாதுகாப்பில் முன்னணி மாநிலமாக திகழ்கிறது தமிழ்நாடு.

NCRB தேசிய குற்ற ஆவண காப்பகம் இறுதியாக வெளியிட்ட ஆய்வறிக்கையின் படி பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தமிழ்நாட்டில் மிக மிக குறைவாகவே உள்ளதை சுட்டிக்காட்டி உள்ளது. அதில் பெண்களுக்கு எதிராக நடைபெறும் குற்ற வழக்குகளின் எண்ணிக்கை நாடு முழுமைக்கும் இலட்சத்துக்கு 65 என்றால் தமிழ்நாட்டில் 24 என்ற அளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பாலியல் வன்புணர்வு வழக்குகளின் தேசிய சராசரி 4.6 என்ற அளவிலும் தமிழ்நாட்டில் 0.7 அளவிலும் உள்ளது.

பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனிலும் பாதுகாப்பிலும் எந்த சமரசமுமின்றி சிறப்பாக செயல்பட்டு வருகிறது முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராய் வீண் வதந்தி பரப்பி அச்சுறுத்த நினைக்கும் பொய்ச்சாமிகளை மக்களே புறந்தள்ளுவர்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# அடுத்து வரும் ஆட்சியும் ஆதவனின் ஆட்சியே!



என்னருமைத் தமிழர்களே !
இனிதான புத்தாண்டைப்
பொன்னாக வரவேற்போம் !
புதுமைகள் படைத்திடுவோம் !

உழைப்பதில் மகிழ்ந்துபிறர்
உழைத்திடச் செய்திடுவோம் !
உழைப்புதரும் ஊதியத்தில்
உறவெல்லாம் காத்திடுவோம் !

கண்மைபோல் மறைந்திடுமே
கருத்தினிலே பொய்சேர்ந்தால்
உண்மையே பேசிடுவோம் !
உண்மைபேச உணர்த்திடுவோம் !

வேதங்கள் கூறுவதை
விலக்கிடுவோம் ! வள்ளுவன் சொல்
வேதமெனக் கொண்டேநாம்
வாழ்வினிலே வென்றிடுவோம் !

நஞ்சுக்கும் மதுவிற்கும்
நனிசிறிதும் வேற்றுமைஇல் !
நஞ்சுண்டார் துஞ்சினாராய்
நவின்றுள்ளார் வள்ளுவனார் !

நெஞ்சத்தின் அன்பையெலாம்
கொஞ்சமுமே மிஞ்சாமல்
கொஞ்சியதம் பிள்ளைகளின்
கல்விநலம் எதிர்பார்த்துக்

காத்திருக்கும் பெற்றோரைக்
கவலையிலே தள்ளிவிட்டு
மூத்தோர்சொல் விட்டுவிட்டு
முந்திப்போய்க் குடித்துவிட்டு

மாய்கின்ற இளையோரை
மீட்பதற்குப் புத்தாண்டை
பாய்ந்தேநீ வாவென்று
பரிவோடு வரவேற்போம் !

ஏழைகளின் நலம் காத்து
எளியோரின் துயர்தீர்த்து
வாழையடி வாழையாய்
வளர்கின்ற இளைஞரின்

கல்விநலம் வளர்ப்பதுடன்
கடல்தாண்டி மலைதாண்டி
பல்வேறு நாடுகளில்
பலதொழில்கள் வளர்த்துள்ள

செல்வர்களை முதலீடு
செய்கின்ற முகவோரை
நல்விதமாய் அணுகிதமிழ்
நாட்டிலே தொழில்வளர்க்க

வருகவென வரவேற்று
ஒப்பந்தம் பலசெய்து
பெருகிவரும் வேலைகளை
இளைஞர்க்குத் தருகின்ற

வீரமகன் ! வெற்றிகளைக்
குவிக்கின்ற தீரமகன் !
யாருமிவர்க் கிணையில்லை
இல்லைஇந்த நாட்டிலென

எல்லோரும் சொல்லுகின்ற
திராவிடத்தின் திருமகன் !
எல்லோர்க்கும் எல்லாமெனும்
தத்துவமே எம்கொள்கை !

சாதிமதம் இல்லாத
சமத்துவம் என் பாதையெனும்
நீதி மகன் ! நெஞ்சத்தால்
நெகிழாத எஃகாவான் !

ஒரேநாடு ஒரேமொழி
ஒரேநாடு ஒரேமதம்
ஒரேநாடு ஒரே தேர்தல்
என்போரை எதிர்க்கின்ற

ஒரே தலைவன் ஊறுசெயும்
எதிரிகளை அஞ்சாமல்
நேருக்கு நேர்நின்று
விரட்டிடும் வெற்றிமகன் !

**புலவர் முத்து.வாவாசி**



காற்றெங்கும் பரவுதல்போல்
கடலலைகள் பெருகுதல்போல்
ஊற்றெடுக்கும் அன்பாலே
உணர்வெல்லாம் பொங்குதல்போல்

ஆட்சிக்குப் பெருகிவரும்
ஆதரவால் அடுத்துவரும்
ஆட்சியும் ஆதவனின்
ஆட்சியே எனவுரைத்துப்

புத்தாண்டே வருகதமிழ்ப்
புத்தாண்டும் பொங்கலும்
மொத்தமாய் வந்துதமிழ்
மக்களுக்கு வாழ்த்துநல்க

வருகவே வருகவே
புத்தாண்டே வருகவே
வரவேற்று மகிழ்கிறோம் !
புத்தாண்டே வருகவே !

### கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா! மாணவர்களுக்கான போட்டி!

## வாகை சந்திரசேகர் தலைமையில் இன்று நடைபெறுகிறது!

சென்னை, ஜன.4 -

கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு முன்னிட்டு பள்ளி மாணவர்களுக்கு கலைஞரின் வசனம் கவிதை மாநில அளவிலான ஒப்பித்தல் போட்டி இன்று (4.1.2025- சனிக்கிழமை) காலை 9 மணிக்கு அண்ணா அறிவாலயத்தில் கலைஞர் அரங்கில் கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் தலைமையில் நடைபெறுகிறது.

தேர்வு பெற்ற மாணவர்களுக்கு புத்தகம் வழங்கி சிறப்பு செய்கிறார் கழக அமைப்பு இணை செயலாளர் அன்பகம் கலை. வாழ்த்துரை வழங்குகிறார் உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் டி.கே.எஸ். இளங்கோவன். சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு முன்னிலை வகிக்கிறார்.

ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி செயலாளர் அன்புதுரை, நடுவர்களாக திருச்சி பழ தமிழ்மாறன், திருவாரூர் கவித்திலகம் வெற்றி பேரொளி, முனைவர் முகம் இளம் மாறன், கவிஞர் முல்லை நரசிம்மன், பொறியாளர் எஸ். ஜே. எஸ். முஸ்தாக் பாட்சா, முனைவர் சி.ம. மாசிலாமணி, கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணைத் தலைவர்கள் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., வாசு விக்ரம், செயலாளர்கள் பொள்ளாச்சி உமாபதி, திருவாரூர் திருவிடம், கலைமாமணி இறையன்பன் குத்தூஸ், வண்ணை அரங்கநாதன், தில்லை செல்வம், துணை செயலாளர்கள் மதுரை சி.வீரகணேசன், கவிஞர் நன்மாறன், திருச்சி எழில் மாறன், செல்வேந்திரன், மீனா ஜெயக்குமார், கே.வி.குப்பம் சி.கோபி, ஜாகிர் உசேன்.

நன்றியுரை: சென்னை மேற்கு மாவட்ட அமைப்பாளர் திருமலை போனுரங்கம்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கீரனூரில் உடற்பயிற்சி கூடத்துடன் கூடிய கலைஞர் பூங்கா அமைக்கும் பணி தொடங்கப்பட்டு நடைபெற்று வருவதை மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன் பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்கினார். நிகழ்வில் குன்றாண்டார்கோவில் ஒன்றிய பெருந்தலைவர் கே.ஆர்.என்.போஸ், மாவட்ட கவுன்சிலர் த.செல்வம், ஒன்றிய செயலாளர் சி.சண்முகம், கீரனூர் பேரூராட்சி தலைவர் கே.எம்.கே.ரவிக்குமார், துணைத் தலைவர் எம்.ஏ.எம். இம்தியாஸ் மற்றும் மின்சாரத்துறை கோட்ட பொறியாளர், கீரனூர் பேரூராட்சி செயல் அலுவலர் உள்ளிட்ட அரசுத்துறை அதிகாரிகள் உடனிருந்தனர்.

### சென்னையில் கழக வழக்கறிஞர் அணி மாநில மாநாடு!

# விழுப்புரம் வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணியினர் திரளாகப் பங்கேற்பு!

## மாவட்ட வழக்கறிஞர் அணி கூட்டத்தில் தீர்மானம்!

திண்டிவனம், ஜன. 4 -

ஜனவரி மாதம் 18ஆம் தேதி சென்னையில் நடைபெறும் தி.மு.க. வழக்கறிஞர் அணி மாநில மாநாட்டில் விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் நிர்வாகிகள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என திண்டிவனத்தில் நடைபெற்றவிழுப்புரம் வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணிஆலோசனை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி சார்பில் தி.மு.க. வழக்கறிஞர்கள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் திண்டிவனத்தில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் கோபிநாத் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப. சேகர், மாநில வழக்கறிஞர் அணி இணை செயலாளரும், கழக மூத்த வழக்கறிஞர் அருள்மொழி ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினர்.

இதில் ஜனவரி மாதம் 18ஆம் தேதி சென்னையில் நடைபெறும் தி.மு.க. வழக்கறிஞர் அணியின் 3வது மாநில மாநாட்டில் கழக தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு. க. ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றார்.

இந்த மாநாட்டில் விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் திரளாக பங்கேற்பதுஉள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முன்னதாக சுனாமி தினத்தை முன்னிட்டு சுனாமியில் உயிரிழந்தவர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

கூட்டத்தில்தலைமைக் கழக வழக்கறிஞர் சுவை சுரேஷ், மாவட்டத் துணைச் செயலாளர் அருணகிரி, மூத்தவழக்கறிஞர் ஆதித்தியன், வழக்கறிஞர் அணி மாவட்ட தலைவர் நெடுஞ்செழியன்,துணைத் தலைவர் கன்னியப்பன்,வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர்கள் விஜயகுமார், நெடுஞ்செழியன், அய்யனார், கமலக்கண்ணன், கிருஷ்ணன்,சுதாகர், புஷ்பராஜ், ராஜா, கிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### கேல் ரத்னா-அர்ஜுனா விருதுகளுக்குத் தேர்வான

# தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்களுக்கு வாழ்த்து!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

சென்னை, ஜன.4 -

விளையாட்டுத்துறையில் நாட்டின் உயரிய விருதுகளான கேல் ரத்னா, அர்ஜுனா விருதுகளுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள தமிழ்நாட்டின் விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு வாழ்த்து தெரிவித்து, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

இது குறித்து அவர் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு

**நமது உலக செஸ் சாம்பியன் டி. குகேஷ் அவர்கள் விளையாட்டுத்துறையில் நாட்டின் உயரிய விருதான மேஜர் தியான் சந்த் கேல் ரத்னா 2024-க்கு தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.**

**அதேபோல, இந்தியா சார்பில் பாராலிம்பிக்ஸில் பதக்கங்களை வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த நம் தங்கைகள் துளசிமதி முருகேசன், நித்ய ஸ்ரீ சுமதி சிவன் மற்றும் மனிஷா ராமதாஸ் ஆகியோருக்கு மதிப்புமிக்க அர்ஜுனா விருது வழங்கப்பட உள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது.**

**இந்த சிறப்புக்குரிய விருதுகளை பெறவுள்ள நமது விளையாட்டு வீரர்-வீராங்கனையர், தொடர்ந்து வெற்றிகளை குவித்து, வாழ்க்கையில் மென்மேலும் உயரங்களை எட்டிட வாழ்த்தி மகிழ்கிறேன்.**

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் சித்தேரியில் ரூ 3.00 கோடி மதிப்பீட்டில் புதிய தார்ச்சாலை அமைப்பதற்கு செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டி பணியை தொடங்கி வைத்தார். உடன் ஒன்றியச் செயலாளர் நெடுஞ்செழியன், நெடுஞ்சாலைத்துறை உதவி பொறியாளர் ஏழுமலை ஆகியோர் உள்ளனர்.